# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் — ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூங] யாழ்ப்பாணம்:- கர வருடம் மாசி மீ உகஉ செவ்வாய்க்கிழமை (4 மார்ஜ் 1952) [இல - அகூ]


# ஒழுக்க உறுதிப்பாட்டின் உத்தமம்

## ஆக்கசக்தியில் அருள் பெறுதல்

இவ்வறிவலா, மனிதன் தான் கொண்ட இலட்சியத்தில் தவறு தொழும் உறுதிப்பாட்டினையும், காப்பாற்ற வேண்டியவற்றை எவ்வாற்றானும் காப்பாற்றி நிற்கும் வீரப்பண்பு மிக்க, மனித கடமையையும், அற ஒழுக்கத்திலீடுபடுத்தி ஆன்ம விளக்கத்திலொன்றுவிக்கும் சமய அனுஷ்டானங்களிற் சாதனை பெறும், பிறவிப்பயனையும், ஒருசேர உளடக்கி, பெருகி அடங்கிய சிறுகல்மாகத் தலங்குகின்றது. பல பொருள் விரிக்குமிச் சிற உரை, உண்மையிற் றளராது நல்லன ஓம்பும், உறுதிப்பாட்டின் அவசியமே தன் மூலமாக அடங்கியுள்ளது. தளரா உறுதியே, தன இலட்சியத்தை நிலைபெறுக்கும், பேராற்றல் படைப்பது.

கணமேனும் நிலைகொள்ளாது சுழலும் மனித உள்ளத்தில, வேண்டுவது விடுவது என்னும் இரு [illegible] றன. இரு [illegible] ப்பட்டு [illegible] விரித்தியங்கும் மனத்தை, ஒருமுகப்படுத்தித் தம்மை நிலைபெறுக்கும் ஆக்கச் சக்தி எதுவென ஆய்ந்து கண்ட மெய்யறிவினர் பலர் அவருள் ஒருவராய ஔவைப் பிராட்டியார், காப்பது விரதம், எனுமோர் சிறு சொல்லாலிப் பெரும் உண்மையை விளக்கவைக்கும் நுட்பம், உணர்வோர் மனத்தை ஒளிபெறச் செய்யும். அறிவு, அறியாமை என இருவகைப்பட்டியங்கு முயிரறிவு உறுதியற்று எதிலும் நிலைபெறமாட்டாது தளரும். மன வழியாய் வெளிப்போந்து, புறப் பொருள்களில் மயங்கி, அவற்றை நாடும் போவாவினுற் பிணிப்புறுந் தன்னிலையழியும் வன்மையற்றுப் பிறப்பிறப்பினிற் றடுமாறுகின்றது. இத்தடுமாற்றத்தினின்றும் நீக்கி, வீடுபேறளிக்கும் உண்மைப் பாதையிற் கொண்டு செலுத்தும் அறிவுத் துணையே, காப்பது விரதம் எனும் அருள் வாக்கு.

### ஆசை நீக்கம்

அறிவின் ஆக்கத்திற்கு வேண்டியவற்றைக் காத்தும், அதனைத் தடைசெய்யத் தீயவற்றை விடுத்தும் ஒழுகும் அற ஒழுக்கமே, ஆன்ம விடுதலை அளிக்கும் உண்மை நெறியாகும். அற ஒழுக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஆசை நீக்கம். ஆசை நீங்கிய மாசற்ற தூய உள்ளத்திலேயே, அற ஒழுக்கம் தளராது உறுதி பெற்று நில்வும். காணபதனைத்திலும் தாவித் தாவி, அவற்றைத் தனதாக்கித் துய்க்கும் பேராசை வயப்பட்டுப், பலபடச் சிதறிப் புறமுகமாயியலும் மனமானது, தன் செயலின் விளைவையும் அழிவையும் நோக்குமுணர்வை இழந்து விடுகின்றது. ஆசை, அறிவொளியை மறைத்து நிற்கும் இருட்பிழம்பாகும். ஆசை இருள் நீங்கவேண்டுமாயின் மனம் அறிவொளியில் திளைக்க வேண்டும். ஆசையின் விளைவே, பிறப்பிறப்பிற் சிக்குண்டு, உலகில் ஓயாதுழலும் சுழற்சி. அறிவின் ஆக்கமே இப்பெருஞ் சுழற்சியினின்றும், உயிரை விடுதலை செய்வது.

### தெய்வீகத்தை உணர்தல்

இவ்வுலகில் நாம் காணும் பல்வகைத் தோற்றங்களுள், தெரிந்து செயலாற்றும் பகுத்தறிவு, இயல்பாகவே மனிதனிடத்து விரிந்து விளங்குகின்றது. மேலான பகுத்தறிவே, அவனை மற்றையவற்றினின்றும் வேறுபடுத்தி ஏற்றமடையச் செய்கின்றது. நன்மையும் தீமையையும் பிரித்துணர்ந்து, உயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் நலன்களை ஓம்பியும், உயிர் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் தீமைகளைக் களைந் [illegible] வாழ்வின் மனித புடமையாகும். நல்லவற்றை ஓம்புக்கம் அற ஒழுக்கமே உண்மை அறிவினைப் பிரகாசிக்கச் செய்வது.

மேலறிவின் விளக்கமுற்றோரை மனித விலங்குகளாகவே அறிஞர்கள் மதித்துள்ளார்கள். மனிதனில், மனிதத் தன்மையை வளர்த்துத் தெய்வீகத்தை நிரப்புவது அறிவின்வழி நின்றொழுகும் உண்மை நழுக்கமே. மனம்வழிச் சிதறி ஆசை வயப்பட்டுழலும் உயிரினை, அறிவின்வழி நிறுத்தும் சாதனையே விரதமாகும். மனம், வாக்குக் காயமாகிய திரிகரணங்களையும் பரிசுத்தஞ் செய்யும் சாதனைகளனைத்தும் விரதத்தின்பாற்பட்டனவே. சொல்லும் நினைவும் செயலும் தூய்மைபெற்றுத் தீயனவிடுத்து நல்லன ஓம்பும் உறுதிப்பாட்டிற் தளராது பயிலும் ஆற்றலடைவதே, விரதத்தின் பயன். இப் பயிற்சியினால், ஆசை நீக்கமும் அருளொழுக்கமும் வலுப்பெற்று, மெய்யறிவு வளர்ச்சியடைகின்றது.

### பேரறிவின் பேறு

ஆசை, உயிரினை அதன் நல் வளர்ச்சிக்குப் பகைமை விளைக்கும் தகாச் செயல்களில் ஈடுபடுத்துகின்றது. இது நம்மால் நீக்கப்பட வேண்டிய கூடா ஒழுக்கமென நம அறிவினுணருமிடத்தும், மனத்தின் மெலிவினத்தால் நாம் அ [illegible] பற்றுகின்றோம். அறிவின் வழி ஒழுகும் ஆற்றல் குன்றியே, அவாவிருத்த மனமவழி ஈர்ப்புண்டு, அறிவிற்கேற்காத் தகாச் செயல்கள் நிகழ்கின்றன. உயிரது செயல் நிகழ்வின் சாட்சி உறவாய், ஆன்ம சாட்சியாய் நிற்பது பேரறிவு. அவ்வறிவு அச்செயலின் தாரதம்மியத்தை எடுத்துணர்த்தி, உயிரினை வேண்டாச் செயல்களினின்றும் விடுவிக்கவே முனைகின்றது. இம்முயற்சியை நாம் மனச்சாட்சி என்கின்றோம் உண்மையை உணர்த்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

—: சிவ தொண்டன் :—

## இந்து ஆலயச் சட்டத்துக்கு ஆதரவு

இந்து ஆலயச்சட்டத்தின் நோக்கத்தைப் பிழையாய்விளங்கி எதிர்த்தவர்களுட் குருக்கள்மாரும் கோயில் அதிகாரிகளுமே பெரும்பான்மையோர். சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்களின் ஆதரவும் அவர்களுக்கிருந்தது.

இப்பொழுது குருக்கள்மார் பலரும், திரு. சிவபாதசுந்தரம் அவர்களுமே ஆதரவளிக்கின்றனராம்.

அரசியல் அலை

## பல்கலைக் கழகம் பயிற்றுவது எம்மொழியில்?

### மும்மொழியும் மூன்று கழகங்களுமா?

### வடக்கில், மத்தியில் தெற்கில் நிறுவுவதா?

அந்நியர் ஆளுகை வந்தது. கூட வந்தது அந்நிய மொழி! ஆளுகை போய்விட்டது, ஆனால், மொழியை வழியனுப்ப வழியில்லையே!

பேராசிரியர் சேர். ஐவர். ஜெனிங்கஸ் அவர்கள் இட்டிருக்கும் ஒரு அறிக்கையில் இரண்டு பல்கலைக் கழகங்கள் வேண்டுமென்கிறார். ஒன்று சிங்களத்திற் பயிற்றவும் மற்றையது தமிழிற் பயிற்றவும்.

பேராசிரியராயிருந்த பாராளுமன்றப்பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தை ஓரளவிற்கு அனுசரித்து ஒரு அபிப்பிராயஞ் சொல்லியிருக்கின்றார்.

ஒரு நாட்டிற்கு ஒன்றல்லப் பல பல்கலைக் கழகங்கள் வேண்டும். இலங்கை இருமொழிப் பரப்பாயிருக்கின்றமையால் இரு கழகங்களையுடையதாகவே வேண்டும். ஆனால் இப்போது பெருந்தொகைப்பணம் செலவு செய்து நிறுவப்பெற்ற கழகம் ஒரு தனி மொழிக்கு உபயோகப்படுத்தப்படுவதானால் நீதியாகாது.

அரசியல் அலையில் எழும் ஒரு கொழுகொம்பைக் கைக்கொண்டு இந்த அரசியற் பிரவாகத்தினின்றும் நீந்தி வெளியேற முடியுமா என்று சிறிது சிந்தித்துப் பாருங்கள். நேயர்காள்!

பேராதனைப் பல்கலைக்கழகம் செந்தமிழ் சிங்களம் சீரிய ஆங்கிலமாம் மும்மொழியினும் பயிற்றப்படவும், யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழிக் கழகமும் காலியில் சிங்களக் கழகமும் அமைத்தால் நன்றாமா?

## "ஐயா, என் ஆருயிரே ... ... !"

திருச்சிற்றம்பலம்

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
ஐயாவென் னாருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்

## உரும்பராய் ஞானவைரவகோயிலில் சிவராத்திரி

ஏராளமான மக்கள் தரிசனைக்கு வந்திருந்தனர். அன்று பிற்பகல் ஆறுமணிக்கே விசேஷ உருத்திர கும்ப பூசையுடன் சிவராத்திரி ஆரம்பமாயது. அத்தருணம் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் 'வைரவ பாதத்துவம்' என்ற பொருள் பற்றியும், இணுவில் வடிவேலு வாசி அவர்கள 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற பொருள் பற்றியும், திரு. க. தி. சம்பந்தன் 'தரும வாழ்க்கை' என்ற விஷயம்பற்றியும் சிறந்த சொற்பொழிவாற்றினர். அதன்பின் திரு. சி. தாமோதரம்பிள்ளை பக்திரச கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். கூட்டுப்பிரார்த்தனையின்பின் திரு. க. சோதிலிங்கம் 'கண்ணப்பநாயனார்' என்னும் அரிய சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதம் கதா பிரசங்கஞ் செய்தார். நடையிலும் இருதிறமும் தீர்த்தோற்சவம் [illegible] நடைபெற்றன.

## ஸ்ரீ இராம கிருஷ்ணரின் திருநாள்

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 27-2-52 புதன் கிழமை மாலை ஜெ. விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அன்று மாலை 3 மணியளவில் விசேட பூசைகள் நடைபெற்றன. 5 மணிக்கு பெருந்திரளான ஆண்கள் - பெண்கள் - மாணவர் வந்து மண்டபத்திற் கூடினர். பாடசாலைச் சங்கீத ஆசிரியை செல்வி பத்மாவதி ஐயாத்துரை அவர்களும் மாணவர்களும் இனிய பிரார்த்தனைப் பாட்டுக் கச்சேரி ஒன்று நிகழ்த்தினர். வித்தியாலயப் பிரதம ஆசிரியர் திரு. ச. அம்பிகைபாகன், B. A. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையின் பின் ஜெ பாடசாலை மாணவர்கள் செல்வன் சி. பாலசுப்பிரமணிய ஐயர், செல்வன் M. கோபாலரத்தினம் ஆகியோர் பகவானது சரிதம் உபதேசம் என்பன பற்றிச் சொற்பொழிவாற்றினர். வழக்கறிஞர் திரு. வி. நாகலிங்கமவர்கள் பகவானைப்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர். யேசுநாதர் புத்தபகவான், இராமகிருஷ்ண பரமஹம்சர், நம்முன் வாழ்ந்த மகாத்மா காந்தியடிகள் என்பவர்கள் போதித்த சன்மார்க்க போதனையைக் கடைப்பிடித்தால் மக்கள் உயர்ந்த இலட்சியத்தில் செல்வார்களெனவும் எதிர்காலச் சமுதாயத்தை ஆக்கித்தரும் மாணவர்களாகிய சிறுவர்களை நல்வழியில் விட்டுச் செல்வதற்குப் பெற்றோரும், ஆசிரியர்களும், பெரியோர்களும் முயற்சி செய்ய வேண்டுமெனவும் அதற்குச் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியும் ஒழுக்கமும் அவசியம் எனவும் குறிப்பிட்டார். பின் சங்கீத பூஷணம் திரு. சண்முகரத்தினமவர்கள் தமது பக்கவாத்தியக் கோஷ்டியினருடன் சேர்ந்து ஓர் இசை விருந்தளித்தனர். இறுதியில் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது. இவ்விழா வித்தியாலய இந்துமாணவசங்கத்தாரால் ஒழுங்கு செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ச் சிங்களச் சர்வ கலாசாலைகள்

தமிழ்ச் சிங்கள சர்வகலாசாலைகளமைப்பைபற்றி ஆராயுமாறு பேராசிரியர்கள் திருவாளர்கள்: ஆற்றிகல, மயில்வாகனம், மாலலசேகர, ரெட்டிக்கோ, ஹெற்றியாராச்சி, கணபதிப்பிள்ளை ஆகியோர் அங்கத்தவராகிய ஓர் சபை அமைக்கப்பெற்றிருக்கிறது.

யாழ்ப்பாண உயர்தர நீதிமன்றத்தில் சேகப்பா செய்யது என்பவர் அடம்பன்சந்தனர்த்தைக் குத்தி கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு எட்டு வருடக் கடுங்காவல் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கரஹு மாசி மீ
உக உ செவ்வாய்க்கிழமை


## ஏழை நோயாளியானுல் இறக்கவே வேண்டும்!

முடியாட்சி ஒழிந்தது குடியாட்சி வந்துவிட்டது. நெறிதவறுச் செங்கோற் சனநாயக அரசாங்கம் இப்பொழுது நடைபெறுமேயானுல் எமன் எங்கள் நாட்டை எட்டியும் பார்க்கக் கூடாது, எல்லாரும் என்றும் உயிரோடு வாழுதல் வேண்டும் என்று எதிர் பார்க்கின்றோம் என்று புத்தி சித்த முள்ளவர்கள் எவருங்கூறவில்லை. ஆனுல் ஏழைகளின் நிலைமையை நேரடியாக அறிந்திருக்கும் சனப் பிரதிநிதிகளின் அரசாங்கத்தில் வறுமைப் பிணியை யகற்ற வேண்டாம், உடற் பிணியை ஒருவாறு தீர்க்க ஏற்ற வசதிகளை உண்டுபண்ணுங்கள் என்றுமட்டும் வேண்டுகின்றோம். அங்ஙனம் வறுமை நோயால் வாடும் ஏழைகள் உடற்பிணி தீர்க்கப் போதிய ஒழுங்குகள் செய்து வைக்க அரசாங்கம் ஊக்கமெடுக்காது விட்டால் ஒரு எமனை அல்ல ஓராயிரம் எமன்களை வரவழைத்து இந்த ஏழைகளை எல்லாம் எமலோகம் அழைத்துச் செல்லும்படி ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றும் வேண்டுகின்றோம்.

இறைவனை வைத்தியநாதன் என்று அழைக்கின்றோம். இறைவனின் பிரதிநிதியாகிய அரசாங்கமும் குடி சனங்களுக்கு வைத்தியநாதனுக இருக்க வேண்டியது முறையே. அரசாங்கம் எங்ஙனம் வைத்திய பரிபாலகராக இருக்க முடியும் என்றால் ஊர்கடோறும் கிராமங்கடோறும் நோயாளிகள் பிணிக்கு மருந்தும் வைத்திய புத்திமதியும் பெறக்கூடிய வசதிகளை ஒழுங்குசெய்து வைப்பதே.

வைத்தியமுறை தொன்றுதொட்டு வழங்கி வந்த சுதேச அமைப்பாயிருக்கலாம். மேலைத்தேச விதமாயிருக்கலாம். எது இருக்கின்றதோ அது செவ்வனே நடைபெறத் தகுந்த வைத்தியர்களும் தக்க நிலையங்களும் போதிய மருந்துகளும் கிடைக்கத்தக்கதாக இருக்க வேண்டும். வைத்தியப் பகுதி மந்திரியாருக்கிருக்கும் பொறுப்போ மிகப் பாரமானது, பயங்கரமானது. ஒரு நாட்டின் மக்கள் நோயால் நலிந்து உழன்று உறுதுணையின்றி உயிர் துறக்க நேரிடும் பாவம் அம்மந்திரியாரையே முதற்கண் சாரும்.

ஒவ்வொரு கிராமத்திலும் அரசினர் வைத்தியசாலை ஒன்று மேனுட்டு முறையிலும் மற்றைய தொன்று எங்கள் நாட்டு முறையிலும் நிறுவப்படல் வேண்டும். இத்தகைய ஒழுங்குகளைச் செய்து முடிக்க ஒரு காலத் திட்டம் போட்டு அக்கால எல்லைக்குட் செய்துமுடிக்க அரசாங்கம் ஆவலாகவும் ஆர்வமாகவும் முயற்சிக்க வேண்டும்.

வைத்தியசாலை என்றது பேரளவிற் பழைய காலக் கேணிகள் குளங்கள் மடங்கள் ஆக்கப்பெற்ற நோக்கங்களுக் குதவாவிதமாகக் காணப்படுவது போலவிருக்கவொண்ணுது. நோயாளிகளுக்கு மருந்திலும் பார்க்க வசதிகளே முதற்கண் தேவையானவை. வைத்தியசாலையில் நோயாளிகளுக்குப் படுக்கை வசதி இல்லாமலிருக்கின்றதென்ற குற்றம் அரசாங்கத்திற் சாட்டப்பட்டு வருவதை நாம் அறிவோம். இப்பெருங் குறையை அகற்ற அரசாங்கம் என்ன ஒழுங்குகள் செய்திருக்கின்றது என்று ஊரவர்கள் வினவுகின்றார்கள். மாபெருங் காரியாட்டங்களை விண்ணவராற்றல் கொண்டு இயற்றி முடிக்கும் சக்திவாய்ந்த அரசாங்கம் நோயால் நலியும் ஏழைகளுக்கு வைத்தியசாலைகளையும் அவற்றிற்போதிய படுக்கை வசதிகளையும் ஒழுங்கு செய்ய முடியாதா என்று பொதுசனம் வினவுவதற்கு அரசாங்கம் என்ன பதில் அளிக்கப் போகின்றது.

போதிய கலாசாலைகளை அமைக்கவில்லை, வேண்டிய விதமாகப் போக்குவாத்து ஒழுங்குகளைச் செய்து விடவில்லை, அல்லது வேறு வாழ்க்கைக்கு அத்தியாவசியகமான வற்றைக் கொடுக்கவில்லை என்று அரசாங்கத்தைக் கண்டிக்கின்றோம், ஆனுல் அரசாங்கந்தான் இவை எல்லாவற்றையும் உடன்கையாக எவ்வாறு செய்து முடிக்கும் என்று மன்னிப்புச் செய்கின்றோம். வைத்திய வசதிகள் என்ற வகையில் அரசாங்கம் மன்றாட்டங் கேட்கமுடியாத நிலையில் இருக்கின்றது.

தொற்று நோய் வைத்திய நிலையங்கள் போதியன உண்டா? மற்றைய சாதாரண வைத்திய நிலையங்கள் தானும் வேண்டியனவுண்டா? நிறுவப்பெற்ற வைத்திய சாலைகளின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகின்றதா. நோயாளிகளுக்கு உண்பதற்கு ஏற்றவிதமான உணவும், ஆறி உறங்குவதற்கு வேண்டிய படுக்கைகளும் கொடுக்கப்படுகின்றனவா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

அரசாங்கமே போனது போகட்டும். ஆவதை அரன் பொதுவில் கெடுத்[illegible]தக்கு வஞ்சகமில[illegible] [illegible]

செய்ய இனியாகிலும் முயற்சிக்காவிட்டால், குடிசனங்களின் நம்பிக்கை யிழந்ததாகக் கருதப்பட வேண்டியதாக இருக்கும். இந்தப் பெருங் குறையை நீக்க இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளில் நாளாந்தம் வரும் நோயாளிகளின் எண்ணுக் கணக்கைப் பரிசீலனை செய்து இடவசதியில்லாத நிலையங்களுக்கு உடனேயே ஏற்ற இடவசதியமைக்கவும், நோயாளிகளின் உணவு சுகாதார முறைப்படி ஆக்கப்பட்டு உதவப்படவேண்டிய ஒழுங்குகளைச் செய்யவும் இன்றே, இன்னே ஆரம்பிக்க வேண்டும் என்று யோசனை கூறுகின்றோம். சம்பிரதாய முறையில் விசாரணைக் குழு ஒன்றை நிறுவிவிட்டு அக் குழுவினரின் அறிக்கையில் விவாதம் நடத்துவது பழைய நாட்டு விளையாட்டுகளில் ஒன்றாகிய கிளித்தட்டு மறித்தல் [illegible]

# திருக்கோணுசலத்தில் சிவராத்திரிச் சிறப்பு

## திருவுருவங்கள் நிறுவிச் சங்காபிஷேகம்

நமது ஈழநாட்டின் கண் தேவாரம் பாடம்பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருக்கோணுசலத்தில் சிவராத்திரி வழிபாடு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஈழநாடெங்கும் பொதுவாக இலங்கை மக்களதும் சிறப்பாகச் சைவ மக்களதும் வழிபாட்டுக்காக எழுந்தருளப்பெற்ற திருவுருவங்கள் தை மாதம் பிற்பகுதியில் திருக்கோணமலையை யடைந்தன. திருக்கோணமலையில் சுவாமிமலையில அடியார்கள் வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்குவதற்காக அமைக்கப் பெற்ற ஒரு மண்டபத்தில் ஷ திருவுருவங்களும் அவற்றைப் போலப் பூமிக்குள் ளிருந்து எடுக்கப்பெற்ற ஒரு விநாயகரும் அம்பாளும் சென்ற தைப் பூசத்திலன்று பக்தோபஸ்தாக அமைக்கப்பெற்ற அறையில மேற்கு முகமாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்று தினமும் அவற்றுக்கு விசேஷ அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெற்று வந்து 23-2-52 சனிக்கிழமை சிவராத்திரியன்று சங்காபிஷேகமும் நான்கு யாமப் பூசைகளும் ஆராதனைகளும் விமரிசையாக நடைபெற்றன. திருக்கோணுசலத்தின் பெருமைகளைப் பற்றியும் திருவுருவங்கள் வெளிப்பட்டமையைப்பற்றியும் அவற்றின் மகிமைகளைப் பற்றியும் பல அறிஞர்கள் பிரசங்கங்கள் செய்தார்கள். பளளிக்கூடப் பிள்ளைகளால் தோத்திரப் பாக்கள் இசையுடன் பாடப்பெற்றன. இன்னிசை விருந்து ஒரு பாகவதரால் அளிக்கப் பெற்றது. இலங்கையின பல பாகங்களிலுமிருந்து பல்லாயிரக் கணக்கான அடியார்கள் சமுகமாயிருந்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து பலர் யாத்திரையாகச் சென்றிருந்தனர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் பேரால் திரு. ஈ. கனகசபைப் பிள்ளை அவர்கள் ஒரு யாம அபிஷேகத்தையும் பூசையையும் செய்வித்தார்.

அங்கே பிரதிஷ்டை செய்யப் பெற்ற திருவுருவங்கள் சாஸ்திர முறைப்படி பூர்த்தி செய்யப் பெறல் வேண்டும். சோமாஸ்கந்த மூர்த்திக்கு முருகனில்லை. சந்திரசேகரருக்கு அம்மனில்லை. எங்கள் முதாதைகளால பன் னூற்றுண்டுகளுக்கு முன் பூசிக்கப்பட்ட மூர்த்திகளென்ற முறையில் அவற்றை நாங்கள் மனமுவந்து வணங்க வேண்டும். ஒரு கோவிலில அவற்றைப் பிரதிஷ்டை செய்து வழிபடுதற்கு முன் அவற்றைப் பூரணமாக்கவேண்டும் என்பது ஆகமநூற் கருத்தை யறிந்த பெரியோர் துணிபாகும்.

பிரித்தானிய கடற்படை அதிகாரிகளும உத்தியோக பூர்வமாக இரவு 7 மணிக்குச் சமுகமாயிருந்தனர்.

திருமூர்த்தங்களுடைய அருளொளியும் சுவாமிமலை ஓரத்தில் அருவமாகவுள்ள இறைவனுக்கு நிகழ்ந்த பூசையின் அற்புதக் காட்சியும் அடியார்களுடைய உள்ளத்தை உருக்கி உள்ளொளி பெருக்கின.

## செய்தித் திரட்டு

=O=

இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் பெருந்தொகை வெங்காயம் வருகின்றதாம்! இனி வெங்காய நெருக்கடியிருக்கமாட்டாதாம்.

O O O

விவாக நீக்க வழக்குத்தொகையில் பெண்கள் தொடர்ந்த வழக்குகளின தொகையே சென்றவருடம் கூடியிருக்கின்றதாம்! இது இக்கால ஆண்களின் அறிவொழுக்கங்களைக் குறிக்கின்றதுபோலும்?

O O O

ஆயுர்வேதத்தை இகழ்ந்தொதுக்க நினைத்தார் பிரதம மந்திரி, என்று திரு. பண்டாரநாயக குற்றஞ்சாட்டினர். ஆயுர்வேத வைத்தியத்துக்கு ஆதரவு கேட்டபொழுது அரசாங்கப் பணத்தை அந்த வழியில் வீணுக்குவதைத் தான் விரும்பவில்லையென்றும், ஆயுர்வேதம் நூதனசாலைக்கே உரியதென்றும் அந்தக்காலத்திற கூறினர் திரு. பண்டாரநாயக என்கிறார் வைத்தியர் திரு. E. திலகறத்ன.

## கால் நடைகளைக் காப்பாற்றக் கழகக் கூட்டம்

நிகழும் மாசி மீ 26உ (9-3-52) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் காந்திய சேவா சங்க ஆதரவில் கால் நடைகளைக் காப்பாற்றும் வழிவகைகளை ஆலோசித்துத் தீர்மானிக்கும் பொருட்டு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

இந்தச் சிறிய தொண்டிற் பங்குபற்றுமாறு காந்திய சேவாசங்கக் காரியதரிசி அவர்கள் அன்பர்கள் யாவரையும் கேட்டுக்கொள்ளுகின்றார்.

# வாழ்க்கை வானில்

வாரம்பதி

## பேச்சுப்போட்டாபோட்டி!

அந்தக் காலத்திலே நாடகக்காரர்கள் தங்கள் ஆட்டங்களை விளம்பரப்படுத்தும்பொழுது 'போட்டாபோட்டி ஆட்டம்' என்று கூறுவது வழக்கம்.

சகதச் சரப சாகித்திய புலிராசர் போறறுங் கவிராசராச .... .... ... .... .... என்று ஒருவருக்குப் புகழுரையிருக்கும்.

நாடகமேடை ஆடக முடிசூடா முத்தமிழ் தத்துவ வித்துவ சிரோன்மணி மகாராச ... ... .... .... என்று மற்றைய வர்ணனை விளங்கும்.

இது நாடகக்காரர்கள் சம்பிரதாயம்.

X X X

இப்பொழுது அரசியற்கட்சியினர் தத்தம் கட்சித்திறனை இத்தகைய பேச்சுப்போட்டியில் காட்டிவிட அழைப்பும அங்கீகரிப்பும்விடுவதும் கொடுப்பதுமாயிருக்கின்றனர்.

யமகண்டம் அரிகண்டம் பாட விருதுக்கொடி நாட்டிய புலவர்கள் தோற்றவர்களுக்கு திராடபதிரவம் விளைவித்தது போல இப் பேச்சுப்போட்டியிலும் தோற்றவர்களைக் கரும்புள்ளி செம்புள்ளி குற்றி வீதி வலம வர விடுவதா? அல்லது வென்றவர்களைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக்கிவிடுவதா?

X X X

அக்காலத்திற் புலவர்கள் போட்டி ஒரு சிலரிடையே யிருந்தது. இக்காலம் மேடைப் பேச்சு நடில்லாத விதமாக இருக்கின்றமுறையில் இருகட்சியாரும பேச்சுப் போட்டி

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி தினம்

திருக்கேதீச்சரத்தில்சிவராத்திரியன்று ஆயிரக் கணக்கான அன்பர்கள் வந்திருந்தார்கள். நான்கு சாமமும் விசேட அபிடேகமும் பூசையும் சிறப்பாக நடைபெற்றது. கந்தபுராணம் அடிமுடிதேடுபடலம் வாசிக்க பரமேசுவரக் கல்லூரி ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் (B.A. B.S.C.) அவர்களாலும், கல்லூரி திரு. பொ. அப்புக்குட்டி அவர்களாலும், திரு. கனகரத்தினம் அவர்களாலும், சாவகச்சேரி திரு. அப்பாக்குட்டி அவர்களாலும், உரை சொல்லப்பட்டது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் சரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதமாய்ச் சங்கீத பூஷணம் திரு வினாசித்தம்பி அவர்கள் பிரசங்கஞ் செய்தார்.

பரமேஸ்வரக் கல்லூரி மாணவர்களும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களும் திருக்கேதீச்சரச் சைவப் பாடசாலை மாணவர்களும் பல தோத்திரப் பாடல்களைப் பாடினர். காலை பாலாவியில் சுவாமியை எழுந்தருளப்பண்ணித் தீர்த்தம் கொடுபட்டதும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் மடாலயத்தில் மகேஸ்வர பூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஞாயிறு இரவு தலைமன்னரிலிருந்து புறப்படும் புகையிரதம் புறப்படாமையால் பகல் புறப்படும் புகைவண்டியைச் சந்திக்கக் கூடியதாய் வவுனியாவுக்கும், மதவாச்சிக்கும் பஸ் ஒழுங்கு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆடற்காட்சி அருள் பெற்ற அழகார் திருத்தலம்

## திருத் தென்குரங்காடுதுறைச் சிறப்பு

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
இரவிற் புறங்காட் டிடைநின் றெரியாடி
அரவச் சடையந் தணன்மேய அழகார்
குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே.

இத் தலம் சோழநாட்டுக் காவிரித் தென்பால் 31-வது திருத்தலமாக வைத்து எண்ணப்படுவது. வாலியார் பூசித்து வழிபட்டமைபற்றி காவிரி வடபால் தலங்களுள் ஒன்றாகிய குரங்காடுதுறை, திருவடகுரங்காடுதுறை எனப் பெயர் பெற்றது போல, இஃது சுக்கிரீவன் வழிபட்ட சிறப்பினதாயமைந்து, தென்பால் நிகழ்வது ஆதலின் திருத்தென் குரங்காடுதுறை எனப் பெயர்பெற்றது. நர்த்தனபுரி, நடராஜபுரம் எனும் திருநாமங்களுடனும் விளங்குவது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் திருப்பதிகம்பெற்ற சிறப்பினது. ஊர்த்தொகைத் திருப்பதிகத்தின் 'குரக்குத் தளியாய்' என நம்பியாரூரர் போற்றுவதும் காண்க. தற்போது ஆடுதுறை என வழங்கப்பெறுகிறது.

### சூரிய வழிபாடு

சூரியன் பூசித்து வழிபாடு செய்த முறைமையின், சில தலங்களில் சூரியபூசைவழிபாடு நிகழ்வது போல, இத் தலத்தும் ஆண்டுக்கு ஒருமுறை மேடமதி ஐந்து, ஆறு, ஏழு ஆகிய நாட்களில் சூரியபூசை வழிபாடு (வெளித் திருவாயிலிலிருந்து மூலத்தானம் வரைப் புள்ள சுமார் இருநூற்று அறுபத்தைந்து அடிகள் நீள இடைவெளியை ஐந்து வாயில்வழியே கடந்து உட்சென்று வலமாக வருகின்ற சூரியனது கிரண ஒளி [illegible] அபிஷேக ஆராதனைகள் விழுச சிறப்புடன் நடைபெறுகிறது.

முனிவர்கள் வழிபட்டுப் பூசித்தமைசான்ற இத்தலத்திறைவன் ஆடற்காட்சி நல்கி அருள் புரிந்தனர். அக்காரணம்பற்றியே ஆலயம் உள்ள அப்பகுதி நர்த்தனபுரி, நடராஜபுரம் எனவும் பெயர் பெறுதலுமாம்.

சுக்கிரீவன் அன்பு நிறை சிந்தையனாய் வழிபாடுபுரிந்து, இங்கு இருப்பதை அறிந்து எனைத் துரத்த பகைமையுடன் தேடிவந்த வாலியார் அறியாவண்ணம் ஆபத்சகாயராம் அண்ணல் இவரை அன்னப் பறவையாகவும், தேவியைப் பாரிஜாதமாகவும் வேறுருக்கொளச் செய்து காத்தருளினர்.

### அநுமார் அருள்பெற்றமை

அநுமார் ஒருசமயம் தருக்கியிமால்வரையும் உருகிட இசைபாடினர். நாரதர் அவ்வமயம் அவ்விசையினை உகந்து கேட்டு அவ்விசைவழி பொருந்தி மயக்கமுற்றனர். ஆங்கு அம் மலையுருகினுள் பொதிந்திடப்பெற்ற அவரது வீணையின் கைவரப் பெருமையால் சினம்மிக்கு அநுமானைச் சபித்தனர். அச்சாபத்தால் மறந்த அவ்விசையினை இங்கு வழிபட்டு மீண்டும் கைவரப்பெற்றனர்.

நாரதர் திருக்கஞ்சனூரில் அவதரித்த பெரியார், சிவமே பரம்பொருள் என்ற அநுபவம் கைவரப்பெற்றவர். நாடோறும் வழிபாடு புரிந்துவரும் சிவாலயங்களுள் இதனையும், ஒன்றாகக் கொண்டு நியதியின் வழிபடுவார், ஒருநாள் வழக்கம்போல் வழிபட்டு மீளுங்கால இறைவன் அருட்சோதனையால் மழைமிகுந்த இருளடர்ந்து செல்லும் வழியறியமுடியாதுபோகவே, இறைவனே வேறு வடிவங்கொண்டு கோல் தாங்கிய கிராமத்தினராய் வழித்துணையாகிப்போந்து இருக்கை சேரச் சேர்ப்பித்து மீண்டனர். அன்புநிறை சிந்தையனாய அடியான் மகளை ஒருவளின் பிரஸவகாலம் துணையிலாது வருந்திட அருந்துணையாகி நின்று (திருச்சிராப்பள்ளி தாயுமானார்போல) உதவி புரிந்தருளினர் என்பன கர்ண பரம்பரை வரலாற்றுச் செய்திகள்.

### அமைப்பு

ஆலயம்: சுமார் முந்நூற்று ஐம்பது அடி நீளம், இருநூற்று ஐம்பது அடி அகலம் உள்ள சுற்று மதில்களோடுகூடிய அழகிய சிவாலயம் கிழக்கு நோக்கிய திருவாயிலை உடையது. இறைவன் ஸ்ரீ ஆபத்சகாயேசுவரர். இறைவி ஸ்ரீ பவளக்கொடியம்மை. இங்கு உள்ள நடராஜர் அழகுமிக்க சுதைத் திருவடிவினர். சுற்றுக்கோவில் ஒன்றில் இலிங்கம் அம்பிகை சுக்கிரீவன் திருவடிவங்களும் கருப்பக்கிருக வெளிச்சுவற்றில் கலவெட்டுக்களும் காணப்பெறுகின்றன. மூவேந்தர்கள், அரசியர்கள் திருவிளக்கெரியவும் அர்ச்சனை வழிபாடுகள் நடைபெறவும் நிபந்தங்கள் அமைத்துத் திருப்பணிகளும் செய்தனர்.

வழிபாடு: இங்கு நாடொறுங் காலங்கள் நான்கும், ஆண்டுதோறும் சூரியபூசனை பங்குனி உத்திரக் காலவிழா, நடராசர் ஆறு அபிடேகம் முதலிய சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

தலவிருக்ஷம்: பாரிஜாதம்.

தீர்த்தம்: காவிரிநதி இத்தீர்த்தக் கட்டம் கல்யாணக் கட்டம் என வழங்கப்பெறுகிறது. சந்நிதியில் கிணறும் ஒன்று உளது.

இத்தலம்: ஆடுதுறை புகைவண்டி நிலயத்திலிருந்து வடதிக்கில் இரண்டு பர்லாங்கு தொலைவில் உள்ளது.

உழைப்பதற்கு வழி!
மாதம் ரூபா 100 தொடக்கம் 800 வரையில் மூலதனமின்றி ஓய்வு நேரங்களில் உழைக்க ஒரு வழியுண்டு. இதுபற்றிய விபரங்களை இவ்விலாசத்திற் கெழுதி அறிக. விபரங்கள் இலவசம்.
Girson Knitting Works
Ludhiana 9

### வாழ்க்கை வானில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

நடத்தி (மூன்றுபடியாக, ஒன்று பெரும்படி, இரண்டாவது இடைத்தரம், மூன்றாவது வடிகட்டினபடி) முடிவுசொல்ல முன் தேர்தல் வந்துபோய்விடும்! வாக்காளர்களுக்கும் பெரும் பொழுதுபோக்காயிருக்கும்.

# உள்ளத்தை உருக்குவதும் வாழ்வை வகுப்பதுமே இலக்கியம்!

## இலக்கில்லா வாழ்வை எடுத்துரைப்பன இயையுமா?

தமிழனின் பண்பாடறியாது பண்படைந்த தமிழகத்தைக் கண்டு மனம் புழுங்குகிறோம். மானமற்ற வாழ்வை மதிக்கத் தலைப்பட்டோம். மேல்நாட்டு மோகத்திற் சிக்குண்டு அன்னிய மொழியே வயிற்றுப் பிழைப்புக்கு வழி கோலுமென அடிமை மனப்பான்மை கொண்டோம். அறியாமை என்னுங் கருமேகம் நம்மைச் சூழ்ந்து கொண்டது. தமிழன்றால் தொல்காப்பியத் தருவதன்று. அது தொன்மையுடையது. அது நாகரிகத் தமிழன்று என விடுத்து, நமது வயிறோம்பும் வாழ்வைத் தரும் கல்வியை மதிக்கின்றோம். உண்மையில் தமிழ் படித்த ஈழத்தவனை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இவ்வித நிலையில் இலக்கியம் எதுவென்று யாரைக் கேட்பது? தன்மானத்துடன் வாழ்ந்த நம் முன்னோரைத்தான் கேட்கவேண்டும். தமிழ் எங்கு பிறந்தது? மீகூக்கலிலா? அன்றிச் சிகிரியாக் குன்றிலா? அன்றி யாழ்ப்பாண மணற்றிடரிலா?

'மலையநாட்டு மதுரையில் வளர்ந்து புலவர் நாவிற் பொருந்திய தமிழைப்' பல்லாயிரமாண்டுகட்கு முன எழுந்த தமிழைத் தொல்காப்பியர், சங்கப் புலவர்கள் ஆகியோரன்றி யாழ்ப்பாணத்தவனே வளர்த்தான எனக் கூறிவிடமுடியுமா?

### தமிழ் பிறந்தது எங்கே?

எங்கிருந்து தமிழ் பிறக்கின்றது? பொதியத்திலிருந்து தமிழ் பிறக்கின்றது. அகத்தியன் வாயிலிருந்து தமிழிலக்கணம் பிறக்கின்றது. அதற்கு முன்பே உலகத் தோற்றத்துடனே தமிழனுடன் தமிழ் மொழியும் பிறந்தது. அம்மொழியின் சிறப்பை எங்கு காண்கின்றோம்? தொல்காப்பியத்தில் தமிழின் தொன்மையைக் காண்கின்றோம், தமிழனின் பண்பட்ட வாழ்க்கையைக் காண்கின்றோம். தமிழனின் பண்பட்ட வாழ்க்கையைக் காட்டுவனவே சங்க இலக்கியங்களனைத்தும். அவையனைத்தும் சிறுசிறு நிகழ்ச்சிகளாகக் காட்சியளிக்கின்றன. அகநானூறு, குறுந்தொகை என்னும் நூல்களில் சிலபாடல்களைப் பாடியோன் பெயர், ஈழத்துப் பூதன்தேவன் என்றிருப்பதை வைத்துக்கொண்டு தமிழ் வளர்த்தோன் ஈழத்தோன் எனக் கூறலாமா? தமிழ் புத்துயிர் பெற ஈழத்தோன் வழி [illegible]

உடலமைப்பில் மனிதனைத் தோன்றவோனை உண்மை மனிதனாகச் செய்வது அவனது மொழியாகிய உயிர். அவ்வுயிரின்றேல் அவன் நடைப்பிணமாகின்றான். அவ்வுயிரிற் கலந்தே பண்பாடு விளங்குகின்றது. உயிருக்குத் தகப் பண்பாடு மாறுபடுகிறது. ஆங்கிலரின் பண்பாடு வேறு. தமிழரின் பண்பாடு தனிப்பட்டது.

### இன்பத் துறவி இளங்கோ தந்த இலக்கியம்

வாழ்க்கையை நிலைப்படுத்தும் சீரிய வழியை வகுப்பது இலக்கியம். கண்ணன் சூழ்ச்சியினால் துரியோதனனாதியர் அழிந்தொழிந்த சரிதையைக் கூறும் பாரதமா? வாலியைக்கொன்று நீதியற்ற வழி நின்ற இராமனும், தமையனுக்குக் கேடு சூழ்ந்த வீடணனும் பெரியவர்கள் எனப் பேசும் இராமாயணமா? மனைவியைப் பார்ப்பனனுக்கு விற்றமையைப் பெருமையாகப் பேசும் அரிச்சந்திர

**பண்டிதபுலவர்**
**த. வடிவேலு அவர்கள்**
**வரைவது**

புராணமா? நட்டாற்றில் மனைவியை விட்டுப் பிரிந்த நளன் சரிதை கூறும் நளவெண்பாவா இலக்கியம்? அவை இலக்கில்லா வாழ்வைப் போதிப்பன. தமிழன் பண்பாட்டிற்கொத்த இலக்கியங்களாகா. உண்மை அன்பு இரண்டும் முதலிடம் பெற்றன தமிழன் பண்பாட்டில். உண்மை வழி நின்ற அவன் வாழ்வில் மானத்தால் வீரந் தலைப்பட்டு விளங்கியது. அன்புவழி நின்ற அவனுள்ளத்தில் வஞ்சச் சூழ்ச்சிகள் இடம்பெற முடியவில்லை. நீதியின் பேரில் வாதிடுவது தமிழன் மரபாயிற்று. மானமுடன் இல்லில் வாழ்ந்த மங்கை கண்ணகி நீதியின்பேரில் வாதாட வெளிப்பட்டாள். தமிழ்மானம் பொங்கியெழுந்தது. மன்னனின் மடமை நீக்கித் தமிழரசின் மாசு தீர்க்கத் துடித்தாள். மன்னனவையடைந்து கணவன் பழிதுடைத்துத் தமிழரசின் மாசு துடைத்தாள், மன்னன் தவறுணர்ந்துமாண்டான். அவன் மங்கை மாண்டாள். மாபத்தினியானாள் கண்ணகி. இதனை விரித்துரைப்பதே சிலப்பதிகாரம். இதுதான் தமிழனிலக்கியம். ஏன் உலகினுக்கே உயர்ந்த இலக்கியம். இவ்விலக்கியம் தமது மங்கையருள்ளத்தைத் தொடுகிறது. மைந்தருள்ளத்தைப் பண்படுத்துகிறது. தமிழன் வாழ்வினை வகுத்துவிடுகின்றது. தன்மானம் படைத்த தமிழரசன் தம்பி தந்த வணிகரின வாழ்க்கைக் கதைதான் இது. அரசர் வாழ்வைப் போதிப்பதன்று. மனித இயல்புடன் காட்சியளிக்கும் கதைதான் சிலப்பதிகாரம். தேவர் வாழ்வைச் சித்திரித்துக் காட்டும் இராமன் கதையோ? மன்னர் வாழ்வை மதிப்புடன் பேசும் பாரதமோ மனிதனைத் தமிழனாக்க வல்லனவா? உண்மை அன்பு அறம் ஆகியவற்றை அடியோடு கொன்றொழிக்கும் கதைகளவை, தமிழன் பண்பாட்டைக் கெடுப்பன அவை. தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்கும் சிலப்பதிகாரக் கதையைத் தந்த இன்பத் துறவி இளங்கோவடிகள் சேரமன்னன் தம்பி. வணிகமாதைப் போற்றத் தலைப்பட்டார். அக்காலத்தும் சாதிப் பித்துப் பிடித்திருக்கலாம். இளங்கோ துறவியாயிருந்தே என் பாண்டிய மன்னன் தேவியைப் புகழ்ந்து பேசியிருக்கலாமே? அவனிடம் அவ்வளவு உயர்வைக் காணவில்லை அடிகள். ஏன் செங்குட்டுவன் மனைவியுமே காணவில்லை. அவளும் கண்ணகிக்கே கோயிலெடுப்பிக்கிறாள். அக்காலத்து திரௌபதி, சீதை, சந்திரமதி ஆகியோரைப்பற்றித் தமிழன் உயர்வாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டார் இளங்கோவடிகள். கண்ணகியின் கதையும் அவர்காதிற்கெட்டியது. அவள் வரலாறு தமிழருக்கு ஒருபெருநிதியெனக் கருதினார். திரௌபதி, சீதை, சந்திரமதி ஆகியோரைப்பற்றிக் கேட்ட அவர் உலகினுக்கே சேயிழையின் கதை உயர்வளிக்குமெனக் கருதினர். ஒரு பெருங் காவியமாகத் தீட்டினார். அது இன்று தமிழனின் பெரு நிதியமாக விளங்கக் காண்கின்றோம்.

அரிச்சந்திரன் மயானகாண்டத்தில் வெறுங் கற்பனையைக் காண்கின்றோம். மனித இயல்புக்கு அங்கு இடமில்லை. ஆனால் மதுரையில் நடந்த மயான காண்டத்திலோ உண்மைச் சம்பவங்கள் பலவற்றைக்காண்கின்றோம். இயல்பாகவே அவலம், வெகுளி, வீரம் ஆகியவை விளங்கக் காண்கின்றோம். திரௌபதியோ, சீதையோ, சந்

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

திரமதியோ நம்மிடையில் வேண்டாம். கண்ணகிபோன்ற மாதரசிகளே வேண்டும். அன்றுதான் உலகமே தாய்மையுடன் விளங்கும். சிலப்பதிகாரத்தைத் தமிழனொவ்வொருவனும் தமது வாழ்வு நெறியை வகுக்கும் உரிய நூலாகக் கொள்ளல் வேண்டும். அதனை உலகம் முழுவதுமே அறியும் வகை செய்தல்வேண்டும்.

# அறிவித்தல்

சைவபரிபாலனசபையாரின் நாவலர்மண்டப ஆச்சிரம நிதிக்காக அன்பர்களுடைய உதவி பெற்றுப் பொருள் திரட்டுமாறு இம்மாதம் 8-ம் திகதி சனிக்கிழமை மாலை இசையரசு, M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள் இங்கு வந்து இந்துக்கல்லூரி முன்றிலில் நடத்தவிருந்த இன்னிசைக்கச்சேரி காதத்ராப்பிரகாரம் சமபவித்த பல நியாயங்கள்பற்றி தவணையிடப்பட்டிருக்கிறது.

பிரவேசச் சீட்டுப்பெற்ற அன்பர்களுக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்த அபிமானிகளுக்கும் இதை அறிவித்துக்கொள்ளுகிறேன்.

சபையின் அன்பர்களுக்கு இவ்விஷயத்தில் பொருள் உதவி செய்து மேலும் தங்கள் அபிமானத்தைக்காட்டுவதற்கு உரிய சந்தர்ப்பம் விரைவில் கிடைக்குமென்றும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

கா. சண்முகம்
காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதய ஆச்சிரமம்

## காந்தீய சேவா சங்கத்தாரின் ஆக்கமுயற்சி

### சர்வோதய காணிக்கை

தேங்காய், வெங்காயம் ஆகிய உணவுப் பொருள்களின் விலை மிக அதிகமாக ஏறியிருப்பதால் மக்கள் அவற்றின் உபயோகத்தை நிறுத்தி விடுவதுதான் புத்திசாலித்தனமாகும். அப்படியில்லாமல் நாவின் ருசிக்காக தேங்காய் வெங்காயம் முதலியவற்றை உணவிற் சேர்க்கவேண்டுமென ஆசைப்பட்டால் இவற்றை அதிக விலைக்கு விற்றுப் பொருள் ஈட்டவேண்டுமென்ற ஆசை வியாபாரிகளுக்கும் வளர்ந்து கொண்டே போகும். அவர்களுக்கு ஏன் அந்த ஆசை வரக்கூடாது. ஆகையால் நாம் அப்படிப்பட்ட உணவுப் பொருட்களை உபயோகிப்பதைக் குறைக்க வேண்டும். அகவிலை ஏறினால் அவற்றைப் பகிஷ்கரிக்கவேண்டும். தேங்காயோ வெங்காயமோ அல்லது வேறு எதுவோ நமது உபயோகத்துக்கு உற்பத்தி செய்து வைத்துக்கொண்டால் அகவிலை எப்படி ஏறும். ஆகையால் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய ஆர்வமும அளவுக்கு மிஞ்சிய விலை ஏறினால் பகிஷ்கரிக்கக்கூடிய மன வலிமையும் இல்லாவிட்டால் உயிர் வாழமுடியாது. ஆகையால் மகாத்மாகாந்தியடிகளின் உபதேசத்தைப் பின்பற்றி நீங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இப்படியான சிறிய முறைகளை நாட்டிற் பரப்புவதற்குத்தான் அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கம் சர்வோதய ஆச்சிரமம் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. சிறிது சிறிதாகவாவது எல்லா மக்களுடைய சொத்துக்களும் இந்த நல்ல உபயோகத்தில் சேர வேண்டும் என்பதற்காகவே சர்வோதய காணிக்கையைச் சேர்க்கத் தொடங்கியுள்ளோம்'' என அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கப் பொதுக்காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் நீர்வேலி சர்வோதய காணிக்கை சேர்த்து வரும்போது ஒரு குறிச்சியில் ஆண்களும் பெண்களும் சேர்ந்த அன்பர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாகக் கூறினர்.

### காணிக்கை விளக்கம்

ஸ்ரீ வேலாயுதபிள்ளை அவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் போய்க் காணிக்கையாகப் பணம் கேட்டபோது சில வீடுகளில் பணம் தர வசதியில்லை என்றார்கள். அப்பொழுது 5 சதம் 10 சதமாவது நீங்கள் தரலாம் என்று கூறினர். இத்தக்கூற்று பல அன்பர்களுக்கு நூதனமாக இருந்தது. இதனாலேயே பல கேள்விகள் கேட்கப்பட்டன. சர்வோதயம், ஆசிரமம், காணிக்கை என்ற மூன்று சொற்களும் கிராமங்களுக்குப் புதிய சொற்களாகும். இந்தச் சொற்களுக்கெல்லாம் அன்பர்களுக்கு விளக்கம் கொடுத்தார்.

### வரவுத் தொகை

சர்வோதய காணிக்கை நீர்வேலியில் 7 நாட்களாக மொத்தம் 107 மணித்தியாலம் 30 நிமிஷம் உழைத்து 828 வீடுகளுக்குக் காணிக்கைக்காகச் சென்றபோது 131 வீடுகளில் வீட்டில் உள்ளவர்கள் இருக்கவில்லை. 198 வீடுகளில் காணிக்கையாகப் பணம் கொடுக்க வசதியில்லை. 499 வீடுகளில் ஒரு சதம்முதல் 10 ரூபாவரை கொடுக்கப்பட்டு 212 ரூபா 33 சதம் சர்வோதய காணிக்கையாக நீர்வேலியில்சேர்ந்தது.

சில வீடுகளில் தாய்மாரகள் பணவசதியீனத்தினுல் உணவுத் தானியங்களை வழங்கினர்கள். சில தாய்மார்கள் சமையலுக்காக இருந்த அரிசியையே கொடுத்தார்கள். ஒரு பாட்டி ஒரு பழப்பாக்கையே காணிக்கையாகக் கொடுத்தார். இவைகள் எல்லாம் ஏலத்தில் விற்கப்படும். வறுமை மிக்க நீர்வேலிக கிராமத்தில் 200 ரூபா தான் சேருமென எதிர்பார்க்கப்பட்டது. காணிக்கை சேர்ப்பதற்கு 2, 3 தினங்களுக்கு முன்னரே துண்டுப் பிரசுரங்கள்மூலம் காணிக்கை சேர்க்கும் விபரம் குறித்து ஒவ்வொரு வீட்டுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

### ஆதரவு

காணிக்கைபற்றிய பிரசாரத்துக்கு நீர்வேலியில் அத்திடார் இந்துக்கல்லூரி, சி. சி. பாடசாலை, ஆர். சி. பாடசாலை, ஐக்கியபண்டசாலைகள், ஜனசமூக நிலையங்கள், ஐக்கியசங்கங்கள் என்பன போாதரவளித்தன. பிராமண சமூகத்தினர் முதல் ஹரிசன சமூகத்தினர் ஈறுக சர்வோதய காணிக்கைவளங்கி ஆதரித்திருக்கின்றார்கள். ஒரு தாயார்மாத்திரம் சர்வோதயக் கொள்கைக்குத் தாம் பணம் தரமுடியாதென மறுத்தார்.

இக்கிராமத்தில் பெரும்பாலும் கமக்காரர்களே வறியவர்கள். பொதுவாக தெய்வ வழிபாடும் ஆலயங்களில் சிவநாமம் படித்தலும் குறைந்து வருகின்றது.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

## ஒழுக்க உறுதிப்பாட்டின் உத்தமம்

—

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வது மனத்தின் சாட்சியாய் அதனை உந்தி நிற்கும் பேரறிவு. தெய்வ சாட்சியைப்பற்றி ஒழுகும் உறுதியும், வேண்டாச் செயல்களை விலக்கும் வன்மையும், அவாமிகுந்து அறிவு குன்றமிடத்து நிலைப்பதில்லை. அறிவும், அதன் வழி ஒழுகும் ஆற்றலும் மிகுமிடத்து, விலக்கப்பட வேண்டிய தீச் செயல்கள் எம்மிடம் நிலை கொள்ளமாட்டா. நம் நினைவு செயலனைத்திற்கும் நம் மறிவே சாட்சியாவதையும், அதன் பயனை நமக்கே தருவதையும் உணர்ந்து, தீயனவிடுத்து நல்லன பற்றி, மனச் சாட்சியிற் தவறு தொழுகும் உண்மை வாழ்வை மேற்கொள்வோம். தீமை பயக்கும் அதர்மத்தினை நீக்கியும், நாம்பயக்கும் தர்மத்தினைத் தாங்கியும், ஆன்ம சாட்சியின்வழி நின்றொழுகுதல் மனித அறமாகும். இப் புனித வாழ்வு உண்மை அறிவினைப் பிரகாசிக்கச் செய்யும். தனக்கு, அழிவினைத்தரும் அவாவில் நீங்கி, ஆக்கத்தினைத்தரும் மெய்யறிவில் நிலைப்பதற்குரிய நியதிகளனைத்தும் விரதமேயாகும்.

இன்னதைச் செய்வேன், இன்னதை விடுவேன் எனக் கடைப்பிடிக்கும் மனித நிர்ணயத்திற்குத் தளரா உறுதி வேண்டும். ஆசை நீக்கமும் அருளொழுக்கமுமாகிய விரதத்தைக்காத்து ஒழுகும் தன [illegible]

## சைவவித்தியா விருத்திச் சங்க ஆசிரியர் சங்கம்

—

### 11-ம் ஆண்டு நிறைவு விழா

—

ஷ சங்கத்தின் 11-ம் ஆண்டு நிறைவுவிழா 27-1-52 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்-திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்க உபதலைவர் திரு. ம. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர். வட பெரும்பாக வித்தியாதிகாரி திரு. K. கிருஷ்ணபிள்ளை B A. அவர்கள் சமயபாடம் என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

இதையொட்டிச் சைவவித்தியா விருத்திச்சங்கச் செயலாளர், திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சிறந்த குறிப்புக்களைக் கூறினுர்கள். பின்னர் பி. ப. 2-30 மணிக்கு ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. அடுத்த ஆண்டுக்குப் பின்வருவோர் உத்தியோகத்தராகத் தெரியப்பட்டனர்.

தலைவர் திரு ம. வைத்தியலிங்கம் அவர்கள், காரியதரிசி திரு. சி. சதாசிவம்பிள்ளை அவர்கள், உபகாரியதரிசி பண்டிதர் திரு கா. நமசிவாயம் அவர்கள், தனாதிகாரி திரு. N பொன்னம்பலம் அவர்கள், நிர்வாகசபைக்கு 13 பேர் தெரியப்பட்டனர்.

யே, தம்மை நிலைபெறுக்கும் ஆக்கச் சக்தியாக அறிந்தனர் ஒளவைப்

சாலாமிஸ்ரி லேகியம

இதனுல் மூலக்குடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சுக்குலாயுவ முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேசபுஷ்டி, வஜ்சரம், பலம் முதலானவை உண்டாகும.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் நீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50, கால்ருத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை [illegible]
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

Printed (and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday March 4. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org